**சுருக்கம்**

கூட்டுறவு வீட்டுவசதி – பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் – பல்வேறு பிரிவினர்க்கு வழங்கப்பட்ட வீட்டுவசதி கடன்கள் – சில சலுகைகள் – வழங்குவது ஆணை வெளியிடப்படுகிறது.

– – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – – –

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீகூச 1) துறை**

அரசாணை (நிலை) எண்.113 நாள்: 20.05.2008.

படிக்கப்பட்டது:

அரசாணை (நிலை) எண்.416, வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் (வீகூச 1) துறை, நாள் 27.12.2007.

**ஆணை:**

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 20.03.2008 அன்று சட்டமன்றப் பேரவையில் வாசித்தளித்த 2008–2009ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் கண்டுள்ளபடி கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் பல்வேறு திட்டங்களில் வழங்கப்பட்ட கடன் பெற்ற பயனாளிகள் பயனடைய கீழ்கண்டவாறு சலுகைகளை வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(i) ரூ.25,000/– வரை கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் பொருளாதாரத்தில் நலிவுற்ற எழை எளியோர் பெற்று திருப்பிச் செலுத்த இயலாமல் நிலுவையில் உள்ள கடன்தொகை, வட்டி மற்றும் அபராதவட்டி ஆகியன முழுவதுமாக ரத்து செய்யப்படுகின்றன.

(ii) ரூ.25,000/– முதல் ரூ.1.00 லட்சம் வரை கடன் பெற்ற கூட்டுறவு வீட்டுவசதி சங்க பயனாளிகளில் தங்களின் நிலுவையிலுள்ள தவணை தவறிய கடனை முழுமையாக திரும்ப செலுத்த முன் வருபவர்களுக்கு அபராதவட்டியை முழுவதுமாகவும் செலுத்த வேண்டிய வட்டியில் 50% வட்டியும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

(iii) ரூ.1.00 லட்சம் முதல் ரூ.2.00 லட்சம் வரை கடனாகப் பெற்ற பயனாளிகளில் தங்கள் தவணை தவறிய கடனை முழுமையாக திரும்ப செலுத்த முன் வருபவர்களுக்கு அபராத வட்டியை முழுவதுமாகவும் செலுத்த வேண்டிய வட்டியில் 25% வட்டியும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

(iv) ரூ.2.00 லட்சம் முதல் ரூ.7.00 லட்சம் வரை கடனாக பெற்ற உயர் வருவாய் பிரிவினரைச் சார்ந்த பயனாளிகளில் தங்கள் தவணை தவறிய கடனை முழுமையாக திரும்ப செலுத்த முன் வருபவர்களுக்கு அபராத வட்டியை தள்ளுபடி செய்வதோடு, செலுத்த வேண்டிய வட்டியில் 10% வட்டியும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

மேற்சொன்னவாறு அரசு அளித்துள்ள சலுகையினை முழுமையாக பயன்பெற விரும்பும் கடன்தாரர்கள், தாங்கள் செலுத்த வேண்டிய தவணை தவறிய கடன் தொகையினை நிலுவையின்றி முழுமையாகச் செலுத்தினால் மட்டுமே இச்சலுகையினைப் பெற இயலும் எனவும் அரசு ஆணையிடுகிறது. மேலும் உறுப்பினர்கள் தவணை தவறிய தவணை தொகையினை 1.4.2008 முதல் 30.9.2008க்குள் முழுமையாகச் செலுத்துவதற்கு கால அவகாசமும் வழங்கி அரசு இதன்வழி ஆணையிடுகிறது.

2. இந்த ஆணையின் பத்தி 1 (i)இன்படி இரத்து செய்யப்பட்டுள்ள தொகை மற்றும் பத்தி 1 (ii), 1(iii) & 1(iv) ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள தள்ளுபடி சலுகைகள் ஆகியவற்றிற்காக அரசிடமிருந்து வழங்கப்பட வேண்டிய நிதியுதவி குறித்த ஆணைகள் பின்னர் தனியே வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அரங்க.செல்லமுத்து
அரசு செயலாளர்

பெறுநர்
கூட்டுறவு சங்க பதிவாளர்(வீட்டுவசதி)
சென்னை–20.
தனி அலுவலர்,
தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்,
சென்னை–7.

நகல்:-
நிதி (வீட்டுவசதி) / (கடன் முன் பணம்) துறை, சென்னை–9.
முதலமைச்சரின் செயலாளர்,
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதி அமைச்சரின்,
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
அமைச்சர் வருவாய் (ம) வீட்டுவசதி அவர்களின்,
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.

இருப்பு கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்